**வெள்ளவாய பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, வெள்ளவாய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான 17 காணித் துண்டுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெள்ளவாய ஆதாபலகம தகனக்கிரியை கூடத்தை சுற்றி மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 1,628,766 பெறுமதியான வலைவேலி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1207 ஆம் இலக்க உறுதியின் மூலம் 2017 மார்ச் 24 ஆந் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த மொரகஹஹேன்யாயவில் அமைந்துள்ள ரூபா 500,000 பெறுமதியான 36 பேர்ச் அளவிலான காணி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ஆதாபலகம தகனக்கிரியை கூட கட்டிட நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,813,132 ஆன பெறுமதி சேர்வரி பெறுமதியும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது புறநெகும செயற்திட்டத்திலிருந்து கிடைத்த ரூபா 682,000 தொகையான Bulky Waste Compress இயந்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நூலகங்களை தன்னியக்கமாக செயற்திட்டத்தின் கீழ் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சிலிருந்து வெள்ளவாய பொது நூலகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 262,592 கூட்டுத்தொகையான உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) வெள்ளவாய பொது நூலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 64,125 ஆன அலுவலக உபகரணங்களில் ரூபா 37,500 குறைத்து மூலதனமாக்கப்பட்டமையால் தளபாடம் பொருத்திகள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் பங்களிப்பு அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) தோட்டங்களை அண்மித்த கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுனந்த கடையிலிருந்து 36 பரப்பு வரை வீதி அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையின் பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமதி கிடைக்க வேண்டிய நிர்மாண உதவியின் கீழ் ரூபா 300,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 116,774 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டில் வீதவரி அறவிடும் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 134,308 ஆன கழிவு வீதவரி கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் நிலுவை வீதவரிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) எதிர்வரும் ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 121,030 ஆன திட்டவட்டமான நிதி ஏற்பாடு கிடைக்க வேண்டிய வேறு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பொதுப் பேரேட்டின் பிரகாரம் நிர்மாண வேலை முற்பணக் கணக்கில் ரூபா 397,572 ஆன செலவு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாண முற்பண பட்டோலையின் பிரகாரம் ரூபா 160,914 ஆன வரவு மீதியொன்று காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) சபைக்குச் சொந்தமான JCB இயந்திரம் மற்றும் மோட்டர் கிரேடர் முன்னைய ஆண்டுகளில் வாடகைக்கு வழங்கியதால் அறவிடப்படாத ரூபா 639,270 தொகை மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 217,454 ஆன ஏனைய மீதிகளை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(iii) சபைக்கு சொந்தமான ஜீப் வண்டியொன்று திருத்த வேலைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்திய ரூபா 100,000 முற்பணத்தொகை உரிய திருத்தங்களை மேற்கொள்ளாமையால் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

முன்னைய ஆண்டிக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 636,537 ஆன செலுத்த வேண்டிய மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 47,259,276 தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |
| (i) 21(2) ஆம் பிரிவு | - | பிரதேச சபைக்குச் சொந்தமான குறுக்கு வீதிகள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 158, 161, 162, 163 மற்றும் 166 ஆம் பிரிவுகள் | 6,458,686 | நிலுவை வீதவரி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.i ஆம் பந்தி | | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்களை 2015 ஒக்தோபர் 10 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத 4 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) ஊவா மாகாண தலைமை அமைச்சர் மற்றும் உள்ளுராட்சி விடய அமைச்சரின் 2013 யூன் 28 ஆந் திகதிய 1816/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | | அனுமதியற்ற வியாபாரங்கள், மற்றும் நடமாடும் வியாபாரங்களை மேற்பார்வை செய்தல், கட்டுப்படுதல், மற்றும் அச்செயற்பாடுகளுக்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் மற்றும் முறையாக்குதவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,984,246 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,600,603 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 6,100,000 | 6,094,213 | 2,577,954 | 3,516,258 | 6,100,000 | 6,078,864 | 2,522,700 | 3,556,164 |
| வாடகை | 10,295,000 | 11,240,685 | 8,249,725 | 2,990,959 | 15,120,000 | 12,146,357 | 9,562,055 | 2,584,302 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,001,200 | 1,262,387 | 1,252,937 | 9,450 | 902,000 | 1,248,155 | 1,248,155 | - |
| ஏனைய வருமானம் | 3,687,500 | 21,702,935 | 14,006,089 | 7,696,846 | 3,875,000 | 20,050,908 | 8,520,457 | 11,530,451 |
| மொத்தம் | **22,083,700** | **40,300,220** | **26,086,705** | **14,213,513** | **25,997,000** | **39,524,284** | **21,853,367** | **17,670,917** |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 40.3 மில்லியனாக இருந்ததுடன் மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 26.1 மில்லியன் வருமானம் சேகரிப்பட்டிருந்ததுடன், பட்டிலிடப்பட்ட பெறுமானத்தில் 65 சதவீதம் அளவிலான குறைந்த பெறுமதியாக இருந்தது.

#### 2.2.3 வீதவரி மற்றும் வரி

(அ) முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வீதவரி ரூபா 9,238,030 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்நிலுவை வீதவரிகளிலிருந்து ரூபா 2,779,344 அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வீதவரி அறவீடு 30 சதவீதம் அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 6,052,614 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 2,508,700 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடப்பாண்டின் வீதவரி அறவீடு 41 சதவீதம் அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது.

**2.2.4 வாடகை**

(அ) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 104 கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,638,500 ஆன வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்தம் குத்தகைக்கு வழங்கப்படும் 04 ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 447,912 ஆன வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதால் முன்னைய ஆண்டிற்குரிய அறவிடவேண்டிய ரூபா 3,057,372 ஆன நிலுவை வாடகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டுகளின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்த 23 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 41,075 ஆன வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2004/2005 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 38,000 ஆன சனசமூக மண்டப வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

**(அ) வியாபார அனுமதிப்பத்திரம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 12 தொடர்பாடல் கோபுரங்களிலிருந்து ரூபா 36,000 கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கைத்தொழில் அனுமதிப்பத்திரம்**

1980 இன் 47 ஆம் இல்கக தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கட்டளையின் கீழ் 1533/16 ஆம் இலக்க 2008 இன் சனவரி 23 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்திற்கு இணங்க சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய 111 கைத்தொழில்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாதிருந்ததுடன் அதன் மூலம் ரூபா 444,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**2.2.6 ஏனைய வருமானம்**

(அ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் வெவ்வேறு நிறுவனங்களுக்கும் நபர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த நிலையான வியாபார மேம்படுத்தல் விளம்பரம் தொடர்பான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1998 ஆம் இலக்க 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய வர்த்தமானி மூலம் நிரந்தர விளம்பரங்களுக்காக கட்டணங்களை அறவிடுவதற்கு பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் 13 நிறுவனங்களால் 07 இடங்களில் காட்சிப்பட்டிருந்த அறிவித்தல்களுக்காக ரூபா 577,390 ஆன கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காணி ஏல விற்பனை மூலம் அறவிடப்பட வேண்டிய 1 சதவீதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 936,930 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள மோட்டார் வாகனங்கள் நிறுத்துமிடங்கள் இனங்காட்டப்பட்டு உப விதிகளைப் பிறப்பித்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,475,718 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 5,812,104 ஆக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 23 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

பிறப்பிக்கப்பட உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) 1998 ஆம் இலக்கமுடைய 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய வர்த்தமானி மூலம் கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்துவது அறவிடுவது தொடர்பாக பிரசித்தபடுத்தப்பட்டிருந்த போதிலும் கழிவுப்பொருள் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் உக்காத கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி கொமபோஸ்ட் உற்பத்திக்கு தேவையான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

(i) கழிவுப்பொருள் வெளியேற்றப்படும் இடத்தை சுற்றி நிரந்தர சுவரொன்றோ அல்லது வேலியொன்றோ நிர்மாணிக்கப்படாமையால் காட்டு யானைகள் கழிவுப்பொருட்களை உணவிற்கு எடுப்பதால் அவற்றின் உயிர்களுக்கு ஆபத்தான நிலைமையொன்று உருவாகியிருந்தது.

(ii) முறையற்ற விதத்தில் பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்ற உக்காத கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்பட்டமையால் அவற்றை சுற்றி அமைந்துள்ள தேக்கு பயிரிடல் காணி வரை வியாபித்திருந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சபை அறிந்துகொள்ளாமையால் அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 23 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக (விதிகள்) இலக்கம் 204 இன் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்விற்காக சமர்ப்பிக்கப்படாத 46 பொருள் உருப்படிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 நூலகப் புத்தகங்களில் பொருட் கணிப்பிட்டிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 57,001 பெறுமதியான 456 புத்தகங்கள் தொடர்பான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

தற்போது சபையில் சேவையில் ஈடுபடாத 57 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 134,697 ஆன கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்கள் காலத்திற்கு காலம் இனங்காணப்படும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதவரி அறவீடு வெளியிடப்பட்டுள்ள பிரதேசங்களில் மதிப்பீடு செய்யப்படாத ஆதனங்கள் தொடர்பாக அட்டவணையொன்று வருமானப் பரிசோதகர்களினால் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஆதனங்களின் அடிப்படையில் தற்காலிக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதவரி பிரதேசத்தினுள் திட்டக்குழு அங்கீகாரம் பெற்று நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்களுக்காக வருடாந்த பெறுமதி மதிப்பிடப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான 13 கடைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 31 கடைகளுக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 1985 இன் மார்ச் 20 ஆந் திகதிய 08/1/38 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 50 கட்டிட திட்டங்கள் பரீட்சிக்கப்பட்டு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 1985 இன் மார்ச் 20 ஆந் திகதிய 08/1/38 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 37 நிர்மாணங்கள் தொடர்பாக திட்டக்குழு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

48 மயானங்களின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 வாகனப் பயன்பாடு

சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களின் மைலோ மீற்றர் செயற்படாமல் இருந்தமையால் அவ்வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூர அளவுகள் ஈடுபடுத்திய எரிபொருள் அளவு தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 3.5.3 விளைவற்ற / குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

ஜே.எம் குமாரதாஸ ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் பராமரிப்பு நடவடிக்கைகள் இடம் பெறாமையால் அது சிதைவடைந்து காணப்பட்டது.

## 3.6. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபைக்கு சுவீகரிக்கப்படாத மஹவெலமுள்ளவில் அமைந்துள்ள அரச காணியொன்றில் ரூபா 170,600 ஆன பொருட்கள் மற்றும் களஞ்சியத்தில் இருந்த ஜீ.ஐ குழாய்கள் பயன்படுத்தப்பட்டு 2016 சனவரி மாதத்தின் போது தொழில் இல்ல தொகுதியொன்றின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் நிர்மாண நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.7 பெறுகைகள்

### 3.7.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரித்தாக பிரதேச சபையின் பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

---------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை போதியளவில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

----------------------------------------------------------

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) காணி கணக்கீடு செய்யப்படாமை |
| | (ii) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை. |
| | (iii) அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்படாமை. |
| | (iv) பெற வேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் | காணியைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |